நடப்பு கடித எண்.2966/டி1/2025

அரசினர் பொறியியற் கல்லூரி,
செட்டிக்கரை, தருமபுரி – 636 704.
நாள்: 06.08.2025

**சுற்றறிக்கை**

பொருள்: மாணவர் பிரிவு – அரசினர் பொறியியற் கல்லூரி, தருமபுரி – இக்கல்லூரியில் 2025-2026-ஆம் கல்வியாண்டில் பி.இ. (B.E) முதலாமாண்டு சேர்க்கை பெற்ற மாணவ/மாணவியர்களுக்கு 11.08.2025 அன்று முதல் கல்லூரி வகுப்புகள் தொடக்கம் – தகவல் தெரிவிப்பது - தொடர்பாக.

******

இக்கல்லூரியில் 2025-2026-ஆம் கல்வியாண்டில் பி.இ. (B.E) முதலாமாண்டு சேர்க்கை பெற்றுள்ள அனைத்து மாணவ/மாணவியர்களுக்கு 11.08.2025 அன்று முதல் முதலாமாண்டு (முதல் பருவம்) வகுப்புகள் தொடங்க உள்ளது. எனவே 11.08.2025 அன்று காலை 9.30 மணிக்கு இக்கல்லூரியில் முதலாமாண்டு சேர்க்கை பெற்றுள்ள அனைத்து மாணவ/மாணவியர்களும் தங்களின் பெற்றோர்களுடன் இக்கல்லூரி வளாகத்திலுள்ள Dr.A.P.J.அப்துல் கலாம் கலையரங்கத்தில் இக்கல்லூரி முதல்வர் தலைமையில் நடைபெறும் முதலாமாண்டு வகுப்புகள் அறிமுக விழாவில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் 11.08.2025 அன்று மேற்படி அறிமுக விழா நிறைவு பெற்றதும் மாணவ/மாணவியர்களுக்கான விடுதி சேர்க்கை (Hostel Admission) நடைபெறும் எனவும், விடுதி வசதி தேவைப்படும் மாணவ/மாணவியர்கள் விடுதி கட்டணம் செலுத்தி விடுதியில் சேர்ந்து கொள்ளுமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. விடுதி கட்டணம் தொடர்பான விவரங்கள் கல்லூரி இணையதளத்தில் (**Website - www.gcedpi.edu.in**) தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/-வே.சுமதி
முதல்வர்

பெறுநர்:

1. முதலாமாண்டு சேர்க்கை பெற்றுள்ள அனைத்து மாணவ/மாணவியர்கள் மற்றும் மாணவ/மாணவியர்களின் பெற்றோர்கள்
(முதலாம் ஆண்டு வகுப்பாசிரியர்கள் வழியாக)

த.பி.பா

நகல்:

1. முதல்வர் மேசை
2. துணை முதல்வர்
3. அனைத்து துறைத்தலைவர்கள்
4. முதலாமாண்டு முதன்மை கல்வி ஆலோசகர்
5. கணினி அறிவியல் மற்றும் பொறியியற் துறைத் தலைவர்
   (கல்லூரி இணையதளத்தில் பதிவிடும் பொருட்டு)
6. முதலாமாண்டு அனைத்து துறை வகுப்பு பொறுப்பாசிரியர்கள்
7. கல்லூரி அறிவிப்பு பலகைகள்
8. விடுதிக் காப்பாளர்/துணைக் காப்பாளர்
9. விடுதி கண்காணிப்பாளர்கள்
10. விடுதி அறிவிப்பு பலகைகள்
11. டி1/டி2/டி3/டி4 – இருப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

முதல்வருக்காக